# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

# C.C.No. 66/2022

2026ம் ஆண்டு ஜூலை மாதம் 20ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.வேல்முருகன் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் பிரமாணச் சட்டம் பிரிவு 4ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.வேல்முருகன் | வயது | : | 48/26 |
| த.பெ/ க.பெ. | : | ராஜகோபால் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | அர்த்தனேரி | நிலை | : | LW03 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரி ஆஜர் இல்லை. அவர் தரப்பு வழக்கறிஞரால் மனுத்தாக்கல் செய்யப்பட்டு ,மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை:**

நான் அர்த்தனேரியில் வசித்து, விவசாய வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன கருப்பையா என் பக்கத்து வீட்டுக்காரர். அ.சா.1, அ.சா.2 ஐ தெரியும். அவர்கள் என் ஊரக்காரர்கள். கடந்த 2021ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை, ஒருநாள் காலை 09.30–10.00 மணிக்குள் நான் வீட்டிலிருந்தபோது, கருப்பையாவிற்கு விபத்து ஏற்பட்டதாக கேள்விப்பட்டு, எங்கள் ஊர் பேருந்து நிறுத்தம் அருகே நான் சென்று பார்த்தபோது, கருப்பையா அடிபட்டு கீழே கிடந்தார். கருப்பையா சாலையை கடந்தபோது, ஜெயங்கொண்டத்திலிருந்து வந்த பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி

மருத்துவமனையில் கருப்பையா சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) கருப்பையாவிற்கு என்ன வயது இருக்குமென்றால் 80 வயதுக்கு மேல் இருக்கும். கருப்பையாவிற்கு காது சரியாககேட்காது என்றால் சரிதான். மேற்படி விபத்து ஏற்பட்ட இடத்தில் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சாலையை எங்கள் ஊருக்கு செல்வதற்காக கடக்கும்போது அடிக்கடி விபத்து ஏற்படும் என்றால் சரிதான்.

2) கருப்பையா சாலையின் இரண்டு புறமும் பார்த்து, கவனித்து சாலையை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் சரிதான்.

/ உண்மை நகல் /

ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.